**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–4

O.S.No.396/2015

2025 ம் ஆண்டுஏப்ரல் மாதம் 29 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. தங்கவேல் | வயது: 62 |
| த/பெ. : திரு. பழனிசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதிகள் ஆஜர். 4,5 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி, 4,5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது – ஒளி நகல் – **சா.சா.ஆ–X5.**

சாட்சி சம்மனில் குறிப்பிட்டுள்ள வரைபடம், சிட்டா தாக்கல் செய்கிறேன். திருப்பூர் வடக்கு பெருந்தொலுவு சர்வே எண். 380 க்குகான வரைபடம் **சா.சா.ஆ– X6**,

திருப்பூர் வடக்கு பெருந்தொலுவு சர்வே எண். 380/3 க்குரியபட்டா எண்.2429 சிட்டா – **சா.சா.ஆ– X7**. (அந்த ஆவணங்கள் இசேவை மையத்தில் இருந்து எடுத்தேன். இந்த ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்பதை தீர்ப்புரையின் போது முடிவுசெய்யப்படும் என்று ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

தேதி ஞாபகம் இல்லை 09 மாதம் 2023 ம் வருடம் வேல்முருகன் என்பவர் நிறைய ரவுடிகளை கூட்டி வந்து ஆயுதங்களுடன் கடப்பாறை, அருவாள், வழிதடத்தை மறைத்தார்கள். நான் எதற்கு வந்துள்ளீர்கள் என்று கேட்டேன். அவர்கள் மப்பில் இருந்தார்கள். எங்களை மிரட்டினார்கள். ஆடு, மாடு கொண்டு

போனேன். மிரட்டினார்கள். மணிவண்ணன் என்பவரிடம் அங்கு வந்து தகராறு செய்துகொண்டுயிருந்தார்கள். தகராறு செய்யதான் வந்துள்ளோம் என்று அந்த ரவுடி சொன்னார்கள். இப்படி 2 மற்றும் 3 நாட்கள் தொடர்ந்து வந்து கொண்டுயிருந்தார்கள். பல்லடத்தில் நடந்த சம்பவம் போல் நடந்துவிடும் என்பதால் நாங்கள் சுற்றி உள்ளவர்கள் சேர்ந்து கலெக்டரிடம் பாதுகாப்பு வேண்டி 11 பேர் சேர்ந்து மனு கொடுத்தோம். டி.எஸ்.பி ஆப்பிஸில் விசாரித்தார்கள். வேல்முருகள் இனிமேல் வரமாட்டேன் என்று சொன்னார். அங்கு எழுதி கொடுத்தார். மணிவண்ணன், உஷா 1999 ல் பூமி வாங்கினார்கள். அதில் இருந்து ஆடு, மாடு, கோழி, நாய் பண்னை வைத்துள்ளார்கள். 30 முதல் 40 நாய்கள் எப்போது வைத்துக்கொண்டு வளர்த்து விற்பனை செய்வார்கள். விவசாயம் செய்கிறார்கள். தென்னை மரம் வைத்துள்ளார்கள். 6 ஏக்கர் உள்ளது. நாய் பண்னை தோட்டம் என்று சொன்னாலே அங்கு இருப்பவர்களுக்கு தெரியும். இதுவரை மணிவண்ணன், உஷா 25 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார்கள். 2007 ம் வருடம் நிறைய நபர்கள் ரகளை செய்துகொண்டுயிருந்தார்கள். நான் சென்று கேட்டேன். அவிநாசிபாளையம் போலீஸ் கூட்டி சொன்னோம் போய் விட்டார்கள். இது சம்மந்தமாக மணிவண்ணன், உஷா புகார் கொடுத்திருந்தார்கள். 2021 ல் வேல்முருகன் ரகளை செய்து கொண்டியிருந்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 14.9.2023 ம் தேதி நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு ஒளி நகல் தாக்கல் செய்கிறேன். அதில் நான் முதலாவதாக கையொப்பம் செய்துள்ளேன். அந்த புகாரின் ஒளி நகல் **சா.சா.ஆ– X8**(கற்றறிந்த 5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் புகார் மனு ஒளி நகல் என்றும் அந்த புகார் நகலில் கடைசி பக்கம் தற்போது வழக்கிற்காக புனையப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது என்றும் புகாரே பொய் புகார் என்று ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆட்சேபனைகள் அனைத்தும் தீர்ப்புரையின் போது கருத்தில் கொண்டு தகுந்த பதில் அளிக்கப்படும்).

2. என்னுடைய சொத்துக்கும் வாதிகளுடைய சொத்துக்கும் இடையே 2000 அடி இருக்கும். நாய் கத்தும் சத்தம் எங்களுக்கு கேட்கும். அதன்பிறகு வேல்முருகன் மணிவண்ணன் மீது அவதூறான அறிவிப்பு கொடுத்தார். அந்த அறிவிப்பையும் நான் கொடுக்க தயாராக உள்ளேன்.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய சொத்தின் சர்வே எண். என்ன என்றால் 380/3. தாவா சொத்து சர்வே எண்.என்ன என்றால் 385/3 இ, 386/1. இந்த சொத்துக்களுக்கு பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் தெரியாது. இந்த சொத்துக்களுக்கு பட்டா வேல்முருகன் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. 1999 ம் வருடம் மணிவண்ணன் தாவா சொத்தை கிரையம் பெறும் போது எங்கு இருந்தார் என்றால் திருப்பூரில் இருந்தார். வாதிகள் தாவா சொத்தை பொறுத்து 2001 ம் வருடம் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தின் படி தாவா சொத்தை நிர்வாகம் செய்வதற்கு சண்முகத்திற்கு முழு அதிகாரம் வாதிகள் கொடுத்துள்ளார்கள் எனறால் தெரியாது. 2002 ம் வருடம் தாவா சொத்தை சண்முகம் முருகானந்ததிற்கு கிரையம் செய்து கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 2001, 2002, 2006 வருடங்களில் ஏற்பட்ட ஆவணங்களின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. 2006 ம் வருடம் தாவா சொத்தை நாகவிஜய் கிரையம் பெற்றது தெரியுமா என்றால் தெரியாது.

2. 2007 ம் வருடம் தாவா பூமியில் பிரச்சனை ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் ரவுடிகளை கூட்டி வந்தார்கள். அந்த சமயத்தில் சொத்தின் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த சமயத்தில் காவல் துறை அதிகாரிகள் புகார் பதிவு செய்தார்களா என்றால் தெரியாது. 2007 ம் வருடம் தாவா சொத்தில் ரவுடிகள் வந்தார்கள் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாகவிஜய் கிரையம் செய்தபிறகு அவருடைய சொத்தின் சுவாதீனத்தை வாதி, மணிவண்ணனிடம் சேர்ந்து

இடைஞ்சல் செய்து கொண்டுயிருந்தார் என்றால் தவறு. இந்த தாவா சொத்தை பொறுத்து மணிவண்ணன் தாவா தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா ஒரு வழக்கு 2007 ல் தாக்கல் செய்துள்ளார்.

3. 2007 ம் வருடம் மணிவண்ணன் தாவா சொத்தை வேறுஒருவரிடம் கிரையம் பெற்றக்கொண்ட விவரங்களை சொன்னாரா என்றால் இல்லை. மணிவண்ணனிடம் வேறு நபர்கள் பிரச்சனை செய்கிறார்கள் அதை பற்றி மணிவண்ணனிடம் கேட்டீர்களா என்று பிரச்சனையை பற்றி சொல்லவில்லை. அந்த சமயத்தில் மணிவண்ணன் தாவா சொத்து வேறு நபர்கள் பெயரில் கிரைய ஏற்பட்டுவிட்டு என்று சொன்னாரா என்றால் இல்லை. தாவா சொத்து 2007 ம் வருடம் வந்த நபர்களிடம் எதற்காக வந்தார்கள் என்று கேட்டார்களா என்றால் இல்லை. மது போதையில் இருந்தால் கேட்கவில்லை. 2007 ம் வருடம் தாவா சொத்து பிரச்சனை உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். மணிவண்ணன் அதன் பிறகு எந்த வருடம் நீதிமன்றத்தில் வழக்கு போட்டதாக சொன்னார் என்றால் 2007 ல் சொத்து சம்மந்தமாக வழக்கு போட்டதாக சொன்னார்.

4. 2007 ம் வருடம் தாவா சொத்தில் பிரச்சனை உள்ளது என்பது எனக்கு, மணிவண்ணனுக்கும் தெரியும் என்றால் ஆமாம். மணிவண்ணன் தாவா சொத்தை பொறுத்து தாக்கல் செய்த வழக்கு என்ன ஆனது என்று சொன்னாரா என்றால் இல்லை. அந்த வழக்கு இடையில் தள்ளுபடி ஏற்பட்டுவிட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை 2017 ம் வருடம் வேல்முருகம் நாகவிஜயிடம் இருந்து சொத்தை கிரையம் பெற்றது தெரியுமா என்றால் தெரியாது. வேல்முருகன் தாவா சொத்து கிரையம் பெற்று அவர் தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் தவறு. 1999 ல் இருந்து வாதிகள் சுவாதீனத்தில் உள்ளார்கள். தாவா சொத்தில் வேல்முருகன் சுவாதீனத்தை நான், வாதிகள், இன்னும் 2 நபர்கள் இடைஞ்சல் செய்து அத்துமீறி நுழைந்தோம் என்றால் தவறு. 2023 ம் வருடம் மணிவண்ணன், உஷா, நான் இன்னும் சில

நபர்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடைஞ்சல் செய்ததை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது என்றால் தவறு.

5. சா.சா.ஆ–X7 புகார் காவல் நிலையத்தில் கொடுத்தீர்கள் என்றால் இல்லை. சா.சா.ஆ–X7 மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கவில்லை, விசாரணைக்காக சா.சா.ஆ–X7 தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிகள் மற்றும் அவருடைய ஆட்கள் இடைஞ்சல் செய்து வந்ததால் வேல்முருகன் வாதிகள் மீது உரிமையில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. தாவா சொத்து வேல்முருகனுக்கு பாத்தியப்பட்டது, வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் தவறு. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்து விவசாய பூமிகள் முழுவதும் வேல்முருகன் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் தவறு. மணிவண்ணன் சுவாதீனத்தில் உள்ளார். தாவா சொத்து உள்ள வீட்டில் மணிவண்ணன் அத்துமீறி நுழைந்து சுவாதீனத்தில் உள்ளார் என்றால் தவறு.

6. தாவா சொத்தில் மணிவண்ணன் 40 நாய்கள் வைத்துள்ளார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வேல்முருகனோ, 4 ம் பிரதிவாதியோ எந்த விதத்திலும் எனக்கு பாத்தியப்பட்ட பொது பாதையில் இடைஞ்சல் செய்யவில்லை என்றால் தவறு. வேல்முருகன் தாவா சொத்தில் 70, 80 ஆட்களுடன் கடப்பாறை, அருவாளுடன் வந்தார்கள் என்று பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் தவறு. மணிவண்ணன் எனக்கு நெருங்கிய நண்பரா என்றால் ஆமாம். அதனால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5 ம் பிரதிவாதி இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.29 15:32:33 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.